APPOLO STUDY CENTRE

# INDIAN POLITY - WORKSHEET

## அரசியலமைப்பு உருவான விதம்

- 1934ல் இந்திய அரசியலமைப்பு சபையை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடியான M.N. ராய் முதலில் கூறினார்.

- 1935ல் இந்திய தேசிய காங்கிரஸ் முதன்முதலாக அரசியலமைப்பு இந்தியாவிற்கு வேண்டும் என வலியுறுத்தியது.

- 1938ல் ஜவஹர்லால் நேரு இந்திய தேசிய காங்கிரஸின் சார்பாக, சுதந்திர இந்தியாவிற்கான அரசியலமைப்பை, அரசியலமைப்பு நிர்ணய சபையின் மூலமாக எவ்வித அயலாரின் தலையீடும் இன்றி வயது வந்தோர் வாக்குரிமையை அடிப்படையாக கொண்டு ஏற்படுத்த வேண்டும் என்று கோரிக்கையை விடுத்தார்.

- இந்த கோரிக்கையின கொள்கைகள் கடைசியாக பிரிட்டிஷ் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1940 "ஆகஸ்ட் கொடை" (August Offer) யாக வெளியிடப்பட்டது.

- 1942ல் சர் ஸ்டே∴போர்டு கிரிப்ஸ், (காபினெட்டின் உறுப்பினர்) இரண்டாம் உலகப்போருக்கு பிறகு இந்தியாவிற்கான அரசியலமைப்பு வரையறை செய்வதற்காக இந்தியாவிற்கு வந்தார்.

- கிரிப்ஸ் விரிவுரையை முஸ்லீம் லீக் நிராகரித்தது. ஏனெனில் இந்தியாவை பிரித்து இரண்டு தனி நாடாகவும், இரு தனி அரசியலமைப்பை அமைக்கவும் முஸ்லீம் லீக் கோரிக்கை விடுத்தனர்.

### அரசியலமைப்பு நிர்ணய சபையின் தொகுப்பு (Composition of the Constituent Assembly)

- 1946 நவம்பரில் காபினெட் மிஷன் திட்டத்தினால் அரசியலமைப்பு நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்டது.

- காபினட் தூதுக்குழுவில் பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டே∴போர்டு கிரிப்ஸ் மற்றும் ஏ.வி. அலெக்ஸாண்டர் ஆகிய மூன்று உறுப்பினர்கள் இருந்தனர்.

## அரசியலமைப்பு நிர்ணய சபையின் சிறப்பம்சங்கள் (Features of the Constituent Assembly)

1. அரசியலமைப்பு சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 389 ஆகும். இவற்றில் 296 இடங்கள் பிரிட்டிஷ் இந்தியாவிற்கும், 93 இடங்கள் சுதேச அரசுகளுக்கும் (Princely States) ஒதுக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 296 இடங்களில் 292 உறுப்பினர்கள் 11 ஆளுநர் மாகாணங்களிலிருந்தும், 4 உறுப்பினர்கள், 4தலைமை ஆணையாளர் மாகாணங்களில் இருந்தும் (ஒன்று என்ற வீதம்) தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2. ஒவ்வொரு மாகாணங்கள் மற்றும் சுதேச அரசுகளுக்கு அவற்றின் மக்கள் தொகை அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்பட்டன. தோராயமாக ஒவ்வொரு மில்லியன் மக்கள் தொகைக்கும் ஒரு இடம் என்று ஒதுக்கப்பட்டது.

3. ஒவ்வொரு பிரிட்டிஷ் மாகாணத்திற்கும் மூன்று முக்கிய வகுப்பினருக்கும் முஸ்லீம், சீக்கியர் பொதுமக்கள் (முஸ்லீம், சீக்கியர் அல்லாதவர்கள்) என இடங்கள் அங்குள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப வழங்கப்படும்.

4. ஒவ்வொரு வகுப்பினரின் பிரிதிநிதிகள் மாகாண சட்டமன்ற பேரவை உறுப்பினரால் ஒற்றை பரிமாற்று வாக்கு முறைப்படி (Single Transferable Vote) விகிதாசார பிரதிநிதித்துவ (Proportioral Representation) அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

5. சுதேச அரசுகளின் பிரதிநிதிகள் சுதேச அரசுகளின் தலைமை மூலமாக நியமிக்கப்பட்டனர்.

♣ எனவே அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு உறுப்பினர்களாக பகுதியளவு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மற்றும் பகுதியளவு நியமிக்கப்பட்டவர்கள்.

♣ மேலும் அரசியலமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினர்கள், மாகாண சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

♣ அரசியலமைப்பு நிர்ணய சபை (பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் 296 இடங்களுக்கு) தேர்தல் 1946 ஜூலை, ஆகஸ்டில் நடந்தது.

♣ இதில் இந்திய தேசிய காங்கிரஸ் 208 இடங்களிலும், முஸ்லீம் லீக் 73 இடங்களிலும் வெற்றி பெற்றனர். சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் மீதமுள்ள 15 இடங்களைப் பெற்றனர்.

♣ இருந்தபோதிலும் இராஜ்ய பகுதிகள் விலகி இருந்ததால் இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 93 இடங்கள் காலியாக இருந்தன.

♣ அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு உறுப்பினர்கள் இந்திய மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படவில்லையென்றாலும், இச்சபையில் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள், பார்சிகள், ஆங்கிலேயர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், பழங்குடியினர், பெண்கள் உட்பட அனைத்து பிரிவினரிடமிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

APOLLO STUDY CENTRE

- அரசியலமைப்பு நிர்ணய சபையில் மகாத்மா காந்தி, முகமது அலி ஜின்னா தவிர அனைத்து முக்கிய பிரமுகர்களும் இடம் பெற்றிருந்தனர்.

### ❧ அரசியலமைப்பு நிர்ணய சபையின் செயல்பாடுகள் (Working of the Constituent Assembly)

- டிசம்பர் 9, 1946ல் அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடந்தது. முஸ்லீம் லீக் தனிநாடு வேண்டும் என்னும் கோரிக்கையால் இதில் கலந்து கொள்ளவில்லை.

- 211 உறுப்பினர்கள் பங்கேற்றனர். டாக்டர் சச்சிதானந்த சின்ஹா (வயதான உறுப்பினர்) அரசியலமைப்பு நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டார். (இநத முறை பிரான்ஸ் அரசிடம் இருந்து பின்பற்றப்பட்டது).

- பின்பு, டாக்டர், ராஜேந்திர பிராசாத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். H.C. முகர்ஜி மற்றும் V.T. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் துணை தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே அரசியலமைப்பு நிர்ணய சபை இரண்டு துணைத்தலைவர்களை கொண்டிருந்தது.

### குறிக்கோள் தீர்மானம் (Objective Resolution)

- 1946, டிசம்பர் 13ல் ஜவஹர்லால் நேரு வரலாற்று சிறப்புமிக்க ‘குறிக்கோள் தீர்மானத்தை’ சட்டசபையில் கொண்டு வந்தார்.

- இவை அரசியலமைப்புக்கு அடிப்படையையும் அரசியலமைப்பு தத்துவத்தையும் விளக்கின.

- 1947 ஜனவரி 22ம் தேதி சட்டசமையில் ஒரு மனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- இதனுடைய திருத்தி அமைக்கப்பட்ட வடிவமே தற்போதைய அரசியலமைப்பு முகவுரை ஆகும்.

### இந்திய விடுதலைச் சட்டத்தால் ஏற்பட்ட மாற்றங்கள்

- காலப்போக்கில் அரசியலமைப்பு சபையில் பங்கு பெறாத சுதேச அரசுகள் மெதுவாக இணைந்தன. 1947 ஏப்ரல் 28 ஆம் தேதி, 6 சுதேச பிரதிநிதிகள் சட்டபேரவையில் இருந்தன.

- 1947 ஜூன் 3ம் தேதி மௌண்ட்பேட்டன் பிரபு திட்டத்திற்கு பிறகு மற்ற சுதேச மாகாண பிரதிநிதிகளும் சட்ட பேரவையில் இணைந்தனர்.

- இந்திய பகுதியில் இருந்த முஸ்லீம் லீக் உறுப்பினரும் இவற்றில் இணைந்தனர்.

- 1947 இந்திய சுதந்திர சட்டத்தின் படி சட்ட சபையில் பின்வரும் மாறுதல்கள் கொண்டு வரப்பட்டது.

- இந்த அவை முழு இறையாண்மை பெற்றதாகவும், எந்த அரசியலமைப்பையும் தன் விருப்பத்திற்கு இணங்க உருவாக்குபவையாகவும் மாற்றப்பட்டது.

- இந்தியாவில் பிரிட்டிஷ் அரசால் உருவாக்கப்பட்ட எந்த சட்டத்தையும் மாற்றவோ, நீக்கவோ சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

- இந்த அவை, சட்டம் இயற்றும் அவையாக மாற்றப்பட்டது. அவையின் இரண்டு தனி செயல்கள் ஒன்று சுதந்திர இந்தியாவிற்கு அரசியலமைப்பு உருவாக்குவது. மற்றொன்று சாதாரண சட்டத்தை உருவாக்குவது. அதனால் இந்த அவையானது சுதந்திர இந்தியாவின் முதல் பாராளுமன்றம் ஆகும்.

- அவையானது டாக்டர்.ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் அரசியலமைப்பு அவையாகவும், G.V. மௌலாங்கர் தலைமையில் சட்டமன்ற அவையாகவும் கூடியது. இந்த இரு செயல்பாடுகளும் 1949 நவம்பர் 26ல் புது அரசியலமைப்பை உருவாக்கும் வரை தொடர்ந்தன.

- முஸ்லீம் லீக் (Muslim League) உறுப்பினர்கள். இந்தியாவிற்கான அரசியலமைப்பு அவையிலிருந்து விலகினர்.

- எனவே அரசியலமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 299 ஆக குறைந்தது. (1946 காபினெட் மிஷன் திட்டத்தின்படி மொத்த உறுப்பினர் 389)

- இந்திய மாகாணங்களில் (பிர்ட்டிஷ் மாகாணம்) உறுப்பினர்களின் எண்ணிக்கை 296 லிருந்து 226ஆக குறைந்தது மற்றும் சுதேச அரசுகளின் உறுப்பினர் எண்ணிக்கை 93லிருந்து 70 ஆக குறைந்தது.

**மற்ற முக்கிய செயல்பாடுகள்**

♣ அரசியலமைப்பை உருவாக்கியவர்கள், புதிய சட்டங்களை கொண்டு வருவது மட்டுமல்லாத அரசியலமைப்பு நிர்ணய சபையின் மற்ற செயல்பாடுகள் பின்வருமாறு

1. மே 1949இல் காமன்வெல்த் கூட்டமைப்பில் இந்தியா உறுப்பினரானது

2. 1947ல் ஜூலை 22ல் தேசிய கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. 1950 ஜனவரி 24ல் தேசிய கீதம் (Jana Gana Mana) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. 1950 ஜனவரி 2ல் தேசிய பாடல் (Vande Mataram) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

5. 1950 ஜனவரி 24ல் முதல் இந்திய ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

♣ அரசியலமைப்பு தயாரிப்பாளர்கள் 60 நாடுகளிலிருந்து, புது அரசியலமைப்பை 114 நாளில் தயாரித்தனர். அரசியலமைப்பை தயாரிக்க மொத்தம் ரூ.64லட்சம் செலவானது.

♣ 1950, ஜனவரி 24ல் அரசயிலமைப்பு சபையின் கடைசி அமர்வு நடைபெற்றது.

♣ இந்த அரசியலமைப்பின் செயல்கள் இந்திய இடைக்கால பாராளுமன்றமாக 1950 ஜனவரி 26லிருந்து புதிய பாராளுமன்றம் (முதல் பொது தேர்தல் 1951-1952 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது.) அமையும் வரை தொடர்ந்தது.

**அரசியலமைப்பு நிர்ணய சபை குழு (Committees of the Constituent Assembly)**

♣ அரசியலமைப்பு சபை, பல பணிகளை கொண்ட அரசியலமைப்பை உருவாக்க உறுப்பினர்களை நியமித்தது.

♣ இவற்றில் 8 குழுக்கள் பெருங்குழுக்களாகவும், மற்றவை சிறு குழுக்களாகவும் அமைக்கப்பட்டன.

| வ.எண் | **பெரிய குழுக்கள்** (Major Committees) | |
|---|---|---|
| 1. | ஒன்றிய அதிகாரக் குழு (Union Powers Committee) | ஜவஹர்லால் நேரு |
| 2. | ஒன்றிய அரசியலைமைப்பு குழு (Union Constitution Committees) | ஜவஹர்லால் நேரு |
| 3. | மாகாண அரசியலமைப்பு குழு (Provincial Constitution Committee) | சர்தார் பட்டேல் |
| 4. | வரைவுக் குழு (Drafting Committee) | Dr.B.R. அம்பேத்கார |
| 5. | ஆலோசனைக்குழு (Advisory Committee)- அடிப்படை உரிமைகள் சிறுபான்மையினர், பழங்குடியினர் மற்றும் விலக்கப்பட்ட பகுதி (Excluded Area)<br>**இவற்றில் 5 துணைக்குழுக்கள் உள்ளன**<br>1. அடிப்படை உரிமைக்கான துணைக்குழு<br>2. சிறுபான்மையினர் துணைக்குழு<br>3. வடகிழக்கு எல்லை பழங்குடியினர் பகுதி மற்றும் அஸ்ஸாம் அல்லாத பகுதியாக விலக்கப்பட்ட பகுதியின் துணைக்குழு<br>4. முழுவதுமாக அல்லது பகுதியளவு விலக்கப்பட்ட பகுதிகளுக்கான (அஸ்ஸாம் தவிர) துணைக்குழு<br>5. வடமேற்கு எல்லைப் பழங்குடியினர் பகுதிகளுக்கான துணைக்குழு | சர்தார் பட்டேல்<br><br>I.B. கிரிபாலனி<br><br>H.C. முகர்ஜி<br><br>கோபிநாத் பர்தோலி<br><br>A.V. தாக்கா |
| 6. | செயல்முறை குழுவின் விதிகள் (Rules of | Dr. இராஜேந்திர |

| | | |
|---|---|---|
| | Procedure Committee) குழு | பிரசாத் |
| 7. | மாநிலக் குழுக்கள் (மாநில பேச்சு வார்த்தை குழு) (States Committee) | ஜவஹர்லால் நேரு |
| 8. | வழிகாட்டுதல் குழு (Steering Committee) | டாக்டர். ராஜேந்திரபிரசாத் |
| **சிறு குழுக்கள்** (Minor Committees) | | |
| 1. | அரசியலமைப்பு நிர்ணயசபையின் செயல்குழு (Committee on the Functions of the Constituent Assembly) | G.V. மௌலாங்கர் |
| 2. | அலுவல் விதிகள் குழு (Order of Business Committee) | Dr.K.M.முன்சி |
| 3. | அவைக்குழு (House Committee) | B.பட்டாபிசித்தராமைய்யா |
| 4. | தேசிய கொடிக்கான தற்காலிக குழு (Ad-hoc Committee on the National Flag) | Dr.ராஜேந்திரபிரசாத் |
| 5. | வரைவு அரசியலமைப்பை ஆராயும் சிறப்புக்குழு (Special Committee to Examine the Draft Constitution) | ஜவஹர்லால் நேரு |
| 6. | தரநிலை ஆவணக்குழு (Credential Committee) | அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் |
| 7. | நீதி மற்றும் அலுவலர் குழு (Finance and Staff Committee) | Dr.ராஜேந்திர பிரசாத் |
| 8. | பத்திரிக்கை துறை தொகுப்புக் குழு (Press Gallery Committee) | உஷாநாத் சென் |
| 9. | தலைமை ஆணையர்களின் மாகாண குழு (Committee on Chief Commissioners Provinces) | B. பட்டாபி சித்தராமைய்யா |
| 10. | மொழிவாரி மாகாணங்கள் குழு (Commission on Linguistic Provinces) | எஸ்.கே. தார் |
| 11. | உச்ச நீதிமன்றத்தின் தற்காலிக குழு (Ad-hoc Committee on the Supreme Court) | S.வரதாச்சாரியார் |
| 12. | ஒன்றிய அரசியலமைப்பின் நிதி வகையங்களுக்கான சிறப்பு நிபுணர் குழு (Expert Committee on Financial Provisions of the Union Constitution) | நளினி ரஞ்சன் சர்க்கார் |
| 13. | குடியுரிமைக்கான சிறப்புக்குழு (Ad-hoc committee on Citizenship) | S. வரதராச்சாரி |

## வரைவுக் குழு (Drafting Committee)

- அனைத்து அரசியலமைப்பு அவையின் குழுக்களிலும் மிக முக்கயமான குழு வரைவுக் குழு ஆகும். இது 1947 ஆகஸ்டு 29ல் அமைக்கப்பட்டது.

- இந்த குழுவே புதிய அரசியலமைப்பை வரைவு செய்தது. இதில் 7 உறுப்பினர்கள் இருந்தனர்.

1. Dr.B.R. அம்பேத்கர் (தலைவர்)
2. N. கோபாலசாமி அய்யங்கார்
3. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்
4. Dr. K.M. முன்சி
5. சையது முகமது சாதுல்லா
6. N. மாதவ ராவ் (உடல்நிலை சரியில்லாமல் B.L.மிட்டர் விலகியதால் அவருக்கு பதிலாக வந்தவர்)
7. T.T. கிருஷ்ணமாச்சாரி (D.P கெய்த்தான் 1948ல் இறந்ததால் இவருக்கு பதிலாக வந்தவர்)

- வரைவுக் குழு முதல் இந்திய அரசியலமைப்பு வரைவை பிப்ரவரி 1948ல் வெளியிட்டது.

- இந்திய மக்களின் 8மாத ஆலோசனைகளின் முடிவுப்படி சில திருத்தங்களுடன் வரைவு கமிட்டி இரண்டாவது அரசியமைப்பு வரைவை 1948 அக்டோபரில் வெளியிட்டது. வரைவு கமிட்டி 141 நாட்கள் இந்திய அரசியலமைப்பின் வரைவு செய்ய எடுத்துக் கொண்டது.

## அரசியலமைப்பு சட்டமியற்றல் (Enactment of the Constitution)

- Dr.B.R. அம்பேத்கார் 1948 நவம்பர் 4ல் இறுதியான அரசியலமைப்பு வரைவை சட்டமன்றத்தில் அறிமுகம் செய்தார்.

- சட்டமன்றம் 1948 நவம்பர் 9 வரை 5 நாட்களுக்கு இந்த அரசியலமைப்பு வரைவை பொது ஆலோசனை செய்தது.

- 1948 நவம்பர் 15 ஆம் நாள் அரசியலமைப்பு வரைவின் இரண்டாம் வாசிப்பு தொடங்கி, 1949 அக்டோபர் 17ல் முடிந்தது. இந்த நிலையில் 7653 திருத்தங்கள் முன்மொழியப்பட்டு 2473 திருத்தங்கள் விவாதிக்கப்பட்டன.

- மூன்றாம் வாசிப்பு 1949 நவம்பர் 14ல் தொடங்கியது. Dr.B.R. அம்பேத்கார், அரசியலமைப்பு நிர்ணய சபையால் அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டது என்ற ஒரு தீர்மானத்தை கொண்டுவந்தார்.

- 1949 நவம்பர் 26ல் அரசியலமைப்பு வரைவு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கப்பட்டது.
- அவையில் இருந்த 299 உறுப்பினர்களில் 284 பேர் அமர்வில் இருந்தனர். இவர்கள் அனைவரும் கையொப்பமிட்டு நிறைவேற்றினர்.

- 1949 நவம்பர் 26ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியலமைப்பில் முகவுரை, 395 சரத்துகள், 8 அட்டவனை அடங்கும்.

- அரசியலமைப்பு இயற்றப்பட்டபிறகே, முகவுரைகள் இயற்றப்பட்டன.

- Dr.B.R. அம்பேத்கார், சட்ட மந்திரியாக இருந்து அரசியலமைப்பு வரைவு அமைய முக்கிய பங்களித்தார்.

- ஆதலால்,'இந்திய அரசியலமைப்பின் தந்ததை' என அழைக்கப்பட்டார். Dr.B.R. அம்பேத்கார் சிறந்த எழுத்தாளர். அரசியலமைப்பு நிபுணர், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக பாடுபட்ட மிகச்சிறந்த தலைவர்.

- 'இந்திய அரசியலமைப்பின் தலைமை சிற்பி' அதே சமயம் 'நவீன மனு' என்றும் அழைக்கப்பட்டார்.

## அரசியலமைப்பு சட்டம் நடைமுறைபடுத்தப்படுதல் (Enforcement of the Constitution)

- அரசியலமைப்பின் சில கூறுகள் குடியுரிமை, தேர்தல்கள், இடைக்கால பாராளுமன்றம், தற்காலிக மற்றும் இடைக்கால ஏற்பாடுகள், சிறிய தலைப்புகளில் சரத்து 5, 6, 7, 8, 9, 60, 324, 366, 367, 379, 380, 388, 391, 392 மற்றும் 394 ஆகியவை 1949 நவம்பர் 26 லிருந்து அமலாக்கப்பட்டது.

- மீதமுள்ள சரத்துகள் 1950 ஜனவரி 26ல் அரசியலமைப்பு அமுலாக்கத்தில் செயல்பாட்டிற்கு வந்தது. இந்த நாளே குடியரசு நாளாக கொண்டாடப்படுகிறது.

- 1929 டிசம்பரில் இந்திய தேசிய காங்கிரஸின் லாகூர் மாநாட்டில், 1930 ஜனவரி 26ஆம் தேதியை பூர்ண சுயராஜ்ஜிய நாளாக கொண்டாட முடிவெடுக்கப்பட்டது.

- அரசியலமைப்பு அமுலாக்கத்திலிருந்து 1947 சுதந்திர இந்திய சட்டம், 1935 இந்திய அரசு சட்டம், இதில் கொண்டு வந்த சில திருத்தங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டது.

- பிரிவி கவுன்சில் அதிகார ஒழிப்பு சட்டம் (Abolition of Privy Council Jurisdiction Act) (1949) தொடர்ந்து அமுலில் இருந்தது.

**காங்கிரஸ் நிபுணர் குழு**

அரசியலமைப்பு நிர்ணய சபைக்கான தேர்தல் நடந்து கொண்டிருக்கும்போதே காங்கிரஸ் கட்சி ஜூலை 8, 1946ல் ஜவஹர்லால் நேருவைத் தலைவராகக் கொண்ட ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. இது அரசியலமைப்பு நிர்ணய சபையின் முன்னேற்பாடுகளை தயாரித்தது.

கிரான்வில் ஆஸ்டின் குறிப்பிடுகையில் "காங்கிரஸ் நிபுணர் குழுவே இந்தியாவை அதன் தற்போதைய அரசியலமைப்பு பாதையில் நிறுத்தியது." என்கிறார்.

**முக்கிய தகவல்கள்:**

1. யானை அரசியலமைப்பு நிர்ணய சபையின் சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. அரசியலமைப்பு நிர்ணய சபையின் இந்திய அரசியலமைப்புக்குழு ஆலோசகராக (சட்ட ஆலோசகர்) பி.என்.ராவ் நியமிக்கப்பட்டார்.

3. அரசியலமைப்பு நிர்ணய சபையின் செயலாளராக H.V.R. ஐயங்கார் நியமிக்கப்பட்டார்.

4. அரசியலமைப்பு நிர்ணய சபையில் அரசிலயமைப்பின் தலைமை வரைவாளராக S.N. முகர்ஜி இருந்தார்.

5. இந்திய அரசியலமைப்பின் எழுத்தாணி பிரேம் பெஹாரி நரேன் ரய்சதா. இவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை தம் கைப்பட சாய்ந்த இத்தாலி எழுத்துருவில் எழுதினார்.

6. அரசமைப்புச் சட்டத்தின் அசல் பதிப்பை அழகுப்படுத்தி அலங்கரிக்க சாந்தி நிகேதனிலிருந்து நந்த லால் போஸ், பியோஹர் ராம்மனோகர் சின்ஹா முதலான கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர்.

7. அசல் முகப்புரையை எழுத்தாணி பிரேம் பெஹாரி நரேன் ரய்சதாவால் எழுதப்பட்டது. அதை பியோஹர் ராம்மனோகர் சின்ஹா அதனை ஒளிப்படுத்தி, அழகாக்கினார்.

8. இந்தி பதிப்பின் உண்மை பதிப்பு வசந்த் கிருஷாண் வைத்யா – ஆல் எழுதப்பட்டது அதனை நேர்த்தியாக ஒளிப்படுத்தி அலங்கரித்தது நந்த லால் போஸ்.

9. அரசியலமைப்பின் உண்மைப் பிரதி (ஆங்கிலம், ஹிந்தி) டெல்லியில் உள்ள பாராளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட கண்ணாடி பெட்டகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**அரசியலமைப்பு நிர்ணய சபையின் மீதான விமர்சனங்கள்**

பல்வேறு காரணங்களுக்காக அரசியலமைப்பு நிர்ணய சபை விமர்சிக்கப்படுகிறது.

1. பிரதிநிதித்துவ அமைப்பு அல்ல: பொதுமக்களால் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படாததால், விமர்சகர்கள் இச்சபையை பிரதிநிதித்துவம் இல்லாத அமைப்பு என்று விமர்சிக்கின்றனர்.

2. இறையாண்மை மிக்க அமைப்பு அல்ல: பிரிட்டிஷ் அரசின் திட்டங்களின் மூலம் உருவாக்கப்பட்டதாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அனுமதியுடன் ஒவ்வொரு கூட்டமும் நடத்தப்பட்டதாலும் இச்சபை இறையாண்மை மிக்கதாக செயல்படவில்லை என்று விமர்சிக்கப்படுகிறது.

3. அதிக நேரும் எடுத்துக்கொண்டது: அரசியலமைப்பு நிர்ணய சபை, அரசியலமைப்பை உருவாக்க மிக அதிக நேரம் எடுத்துக்கொண்டதாக விமர்சகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அமெரிக்காவின் அரசியலமைப்பை உருவாக்க நான்கு மாதங்களே ஆனது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர். அரசியலமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினரான நசிருதீன் அகமது வரைவுக் குழுவை மிதந்து செல்லும் / சறுக்கல் குழு (Drifting Committee) என்று கூறி அழைத்தார்.

4. காங்கிரசின் ஆதிக்கம்: பிரிட்டிஷ் அரசியலமைப்பு நிபுணராகிய கிரான்வில் ஆஸ்டின், ''ஒரு கட்சி முறை கொண்ட நாட்டின் ஒரு கட்சி அமைப்பே அரசியலமைப்பு நிர்ணப சபை, காங்கிரஸ் தான் அரசியலமைப்பு சபை மற்றும் காங்கிரஸ் தான் இந்தியா'' என்று குறிப்பிடுகிறார்.

5. வழக்கறிஞர்கள்: அரசியல்வாதிகள் ஆதிக்கம்: சமுதாயத்தின் மற்ற பிரிவுகள் போதுமான பிரதிநிதித்துவம் பெறவில்லை என்றும் விமர்சிக்கப்படுகிறது. அரசியலமைப்பு, மிகப் பருமனாக இருப்பதற்கும், சிக்கலான மொழி நடையைக் கொண்டிருப்பதற்கும் இதுவே முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

6. இந்துக்களின் ஆதிக்கம்: அரசியலமைப்பு நிர்ணய சபை, இந்துக்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதாக சில விமர்சகர்கள் கருதுகின்றனர். விஸ்கௌண்ட் சைமன் பிரபு, 'இந்துக்களின் அமைப்பு' என்றும் வின்ஸ்டன் சர்ச்சில் 'அரசியலமைப்பு நிர்ணய சபையானது ஒரே ஒரு பெரும்பான்மைச் சமூகத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது' என்றும் இச்சபையை குறிப்பிடுகின்றனர்.

| அரசியல் நிர்ணய சபையின் அமர்வுகள் | |
|---|---|
| **அமர்வுகள்** | **அமர்வின் காலம்** |
| முதல் அமர்வு | 9-23 December, 1946 |
| இரண்டாம் அமர்வு | 20-25 January, 1947 |
| மூன்றாம் அமர்வு | 28 April - 2 May, 1947 |
| நான்காம் அமர்வு | 14-31 July, 1947 |
| ஐந்தாம் அமர்வு | 14-30 August, 1947 |
| ஆறாம் அமர்வு | 27 January, 1948 |
| ஏழாம் அமர்வு | 4 November, 1948 - 8 January, 1949 |
| எட்டாம் அமர்வு | 16 May - 16 June, 1949 |
| ஒன்பதாம் அமர்வு | 30 July -18 September, 1949 |
| பத்தாம் அமர்வு | 6-17 October, 1949 |
| பதினொன்றாம் அமர்வு | 14-26 November, 1949 |

| அரசியல் நிர்ணய சபையின் காலவரிசை | |
|---|---|
| ஜூலை - ஆகஸ்ட் 1946 | அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் |

| | |
|---|---|
| நவம்பர் 1946 | அரசியலமைப்பு சபை அமைக்கப்பட்டது |
| நவம்பர் 17, 1946 | அரசியல் நிர்ணய சபை மேலாதிக்க சட்டமன்றமாக கூடியது |
| டிசம்பர் 9, 1946 | அரசியலமைப்பு சபையின் முதலாவது கூட்டம் |
| டிசம்பர் 13, 1946 | அரசியல் நிர்ணய சபையில் குறிக்கோள் தீர்மானம் கொண்டு வரப்பட்டது |
| ஜனவரி 22, 1947 | குறிக்கோள் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| ஜூலை 22, 1947 | தேசியக் கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| ஆகஸ்ட் 29, 1947 | வரைவுக் குழு அமைக்கப்பட்டது |
| அக்டோபர் 1, 1947 | அரசியலமைப்பின் முதல் வரைவு தயாரிக்கப்பட்டது |
| பிப்ரவரி 21, 1948 | அரசியலமைப்பின் முதல் வரைவு சமர்ப்பிக்கப்பட்டது |
| அக்டோபர் 26, 1948 | அரசியலமைப்பின் இரண்டாவது வரைவு வெளியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது |
| நவம்பர் 4, 1948 | அரசியலமைப்பின் இறுதி வரைவு அறிமுகப்படுத்தப்பட்டது |
| 1948 நவம்பர் 4 முதல் 9 வரை | அரசியலமைப்பு வரைவின் முதல் வாசிப்பு |
| 15 நவம்பர் 1948 முதல் 17 அக்டோபர் 1949 வரை | அரசியலமைப்பு வரைவின் இரண்டாவது வாசிப்பு |
| 14 நவம்பர் 1948 முதல் 26 நவம்பர் 1949 வரை | அரசியலமைப்பு வரைவின் மூன்றாவது வாசிப்பு |
| ஜனவரி 24, 1950 | அரசியலமைப்பு சபையின் இறுதி அமர்வு |
| நவம்பர் 26, 1950 | அரசியலமைப்பு வரைவு நிறைவேற்றப்பட்டது |

**Interim Government (1946)**

| SI.NO | Members | Portfolios Held |
|---|---|---|
| 1. | Jawaharlal Nehru | Vice-President of the Council; External Affairs and Commonwealth Relations |
| 2. | Sardar Vallabhbhai Patel | Home, Information and Broadcasting |
| 3. | Dr. Rajendra Prasad | Food and Agriculture |
| 4. | Dr. John Mathai | Industries and Supplies |
| 5. | Jagjivan Ram | Labour |
| 6. | Sardar Baldev Singh | Defence |
| 7. | C.H. Bhabha | Works, Mines and Power |
| 8. | Liaquat Ali Khan | Finance |
| 9. | Abdur Rab Nishtar | Posts and Air |
| 10. | Asaf Ali | Railways and Transport |
| 11. | C. Rajagopalachari | Education and Arts |
| 12. | 1.1. Chundrigar | Commerce |
| 13. | Ghaznafar Ali Khan | Health |
| 14. | Jogendra Nath Mandal | Law |

**First Cabinet of Independent India (1947)**

| SI.NO | Members | Portfolios Held |
|---|---|---|
| 1. | Jawaharlal Nehru | Prime Minister; External Affairs and Commonwealth Relations; Scientific Research |
| 2. | Sardar Vallabhbhai Patel | Home, Information and Broadcasting; States |
| 3. | Dr. Rajendra Prasad | Food and Agriculture |
| 4. | Maulana Abul Kalam Azad | Education |
| 5. | Dr. John Mathai | Railways and Transport |
| 6. | R.K. Shanmugham Chetty | Finance |
| 7. | Dr. B.R. Ambedkar | Law |
| 8. | Jagjivan Ram | Labour |
| 9. | Sardar Baldev Singh | Defence |
| 10. | Raj Kumari Amrit Kaur | Health |
| 11. | C.H. Bhabha | Commerce |
| 12. | Rafi Ahmed Kidwai | Communication |
| 13. | Dr. Shyama PrasadMukherjee | Industries and Supplies |
| 14. | V.N. Gadgil | Works, Mines and Power |